பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத வரு கார்த்திகை மீ 13 உ வியாழக்கிழமை (29 11 1990) UTHAYAN—A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 3

# விமானக் குண்டு வீச்சினால் ஒட்டுசுட்டானில் 9 பேர் பலி!

## கோவில், பாடசாலை சேதம்

யாழ்ப்பாணம், நவ. 29

**ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று முன்தினம் —மாவீரர் தினத்தன்று—இடம்பெற்ற கண்மூடித்தனமான பொம்மர் தாக்குதலில் ஒன்பது அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; ஐந்து பேர் காயமுற்றனர்**

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயமும், சிவன் கோவிலும் முற்றாகச் சேதமுற்றன.

விமானத் தாக்குதலில் உயிரிழந்தோர் விவரம் வருமாறு:

மகாலிங்கம் பாப்பா [27 வயது]-பூதம்வயல், முள்ளியவளை, தம்பிராஜா செல்வராஜா [21 வயது] - கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், செல்வன் விக்னேஸ்வரன் [23 வயது] - புதுக்குளம், அருணாசலம்[65 வயது] - மாங்குளம். அருணாசலம் சுகிதா [12

(4ஆம் பக்கம் பார்க்க)

## சீ-பிளேன் தாக்குதல் இப்போது இரவில் வழமை!

குடாநாட்டில் இரவு வேளைகளில் - நாள் தவறாது - பல பகுதிகளிலும் சீ-பிளேன் தாக்குதல்களை நடத்தி வருகிறது. சீ-பிளேன் தாக்குதல் இப்போது இரவில் வழமைச் சம்பவமாகிவிட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் எமது செய்தியாளர்கள் அனுப்பியுள்ள தகவல்களில் இருந்து இது தெரியவந்துள்ளது.

முன்னர் ஹெலி நாள் தவறாமல் செய்து வந்த இந்தப் ''பணியை'' இப்போது சீ-பிளேன் ஏற்றுக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பண்டத்தரிப்பு, மாதகல், சங்கானை கொக்குவில், மானிப்பாய், வேலணை, சுன்னாகம், கொடிகாமம் மற்றும் பல பகுதிகளில் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ளனர். [ஓ-3-69]

## வடக்கின் முக்கிய பகுதிகள் முழுவதும் புலிகளின் வசமே

### அமைச்சர் ரஞ்சன் ஒப்புக் கொள்கிறார்

கொழும்பு, நவ. 29

மாங்குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதன் மூலம் வட பகுதியில் முக்கிய பகுதிகள் முழுவதையும் விடுதலைப் புலிகள் தம்வசப்படுத்தி விட்டார்கள் என்பதை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா ஒப்புக்கொண்டார்.

இதேவேளை—

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதத் தொழிற்சாலை எதையும் நடத்தவில்லை என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியதை அமைச்சர் விஜேரத்தினா நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஏற்றுக்கொண்டார்.

வடபகுதியின் ஏறக்குறைய முழுப்பகுதியும் விடுதலைப் புலிகள் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது. [ஓ-எ]

## ஜே. வி. பி. முக்கியஸ்தர்கள் கைதாம்

ஜே. வி. பி. யின் தற்போதைய தலைவரான சோமவன்ஸ அமரசிங்காவின் நெருங்கிய சகாக்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுவிட்டனர்.

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில தினங்களில் கம்பஹா மாவட்டத்தில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன என்றும் அவர் சொன்னார். (ஓ-எ)

## சீ-பிளேன் சூடு! ஷெல் வீச்சு!!

## தாக்குதலுக்கு மத்தியிலும் எழுச்சிக் கூட்டத்தில் மக்கள்

வேலணையில் நேற்று முன்தினம் மாலை 6 30 மணியளவில் இடம்பெற்ற சீ-பிளேன் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் காயமடைந்தனர்.

வேலணை ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த வ. வித்தகன் (வயது 16), ச. திருமாறன் (வயது 16) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை புளியங்கூடல் பகுதியில் மாவீரர் எழுச்சிக் கூட்டம் நடக்கஇருந்தவேளையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது; எனினும் அதன் பின்னரும் கூட்டம் பெரும் திரளான மக்களுடன் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது சற்றுத் தொலைவில் ஷெல் ஒன்று பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தது,

இந்த ஷெல்லினால் புளியங்கூடலைச் சேர்ந்த சிற்றம்பலம் வனஜா, மணியம் நல்லையா ஆகியோர் காயமுற்றனர்.

ஷெல் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்ற போதும் கூட்டம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது (உ. ஓ-125 5]

## மைனா பிடிக்க முயன்றவர் பாம்பு கடித்து மரணம்!

### சரவணையில் பரிதாப சம்பவம்

புளியங்கூடல், நவ. 29

மைனா பிடிப்பதற்காக மரப் பொந்துக்குள் கையை விட்ட சிறுவன் நாகபாம்பு தீண்டி மரணமானான்.

நேற்று சரவணையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிவலிங்கம் சிவனேஸ்வரன் (வயது 7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

பாம்பு தீண்டிய போது மைனா தான் கொத்தியது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் அதிகாரிகளை கொழும்பு வர அழைப்பு

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் அதிகாரிகள் 9 பேர் கொழும்புக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆலையின் நிலை குறித்து ஆராய்வதற்காக இரு உயர் அதிகாரிகள் கொழும்பு தலைமைப் பீடங்களின் அழைப்பின்பேரில் ஏற்கனவே அங்கு சென்றுள்ளனர்.

அவர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இரு ஆலைகளினதும் பலவேறு பிரிவுகளைச் சேர்ந்த ஒன்பது உயர் அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். [ஓ-3]

## 47 வயதான ஜோன் மேஜர் பிரி. பிரதமராகப் பதவி ஏற்பு

லண்டன், நவ 29

பிரிட்டனின் புதிய பிரதமராக 47வயதான திரு. ஜோன் மேஜர் பதவியேற்றார்.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் புதிய தலைவராக திரு. மேஜர் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவானதைத் தொடர்ந்து, திருமதி தாட்சர் பக்கிங்ஹாம் மாளிகை சென்று மகாராணியிடம் முறைப்படி தனது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

நாற்பது நிமிடங்கள் கழித்து திரு. மேஜர் பக்கிங்ஹாம் மாளிகை சென்று மகாராணியைச் சந்தித்து, பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

மூன்று ஆண்டுகால [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சுன்னாகம் நகரில் செவ்வாய் இரவு பல ஷெல்கள் விழுந்து வெடித்தன

### கடைகள், வீடுகள் சேதமுற்றன; சிலர் காயம்

சுன்னாகம், நவ. 29

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் (செவ்வாய்) இரவு திடீரென அடுத்தடுத்து பல ஷெல்கள் வந்து விழுந்தன,

ஷெல் வீச்சில் பல கடைகள், வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்தன. சிலர் காயமடைந்தனர்.

இரவு 7 30 மணியளவில் வந்த சீ-பிளேன் சந்தைப் பகுதியில் பல தடவைகள் கலிபர் தாக்குதலை நடத்தியது.

தாக்குதல் முடிந்த பின்னர் பலாலி நோக்கிச் சீ-பிளேன் சென்றது சில நிமிடங்களில் ஷெல்கள் வந்து விழுந்து வெடித்தன.

அனேக கடைகளின் இரும்புக் கதவுகள் ஷெல் துண்டுகளினால் துளைக்கப்பட்டிருந்தன. [illegible] பகுதிகளில் இருந்த பல கடைகள் வீடுகள் சேதமுற்றன:

பா.ஜெகசோதி (வயது 45), அவரது மகளான பா. ஜெயபானு (வயது 16) மற்றும் சி. சாந்தி; இ. பாலகுமார் ஆகியோர் காயமுற்றனர்.

சீ பிளேன் தாக்குதலில் ஆ.இரவிச்சந்திரன் (வயது 22) என்பவர் காயமுற்றார். (ஓ 89-68-86)

## வவுனியா பகுதியிலும் கடும் விமானக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 29

நேற்று முன்தினம் வவுனியாப் பகுதியிலும் கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

காலை 9 மணி முதல் நண்பகல் 11 மணி வரை இடம்பெற்ற இந்த விமானத்தாக்குதல்களினால் பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் சேதங்கள் பற்றிய விபரமான தகவல்கள் ஏதும் நேற்றிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

சாஸ்திரி கூழாம் குளம், நொச்சிமோட்டை ப்பாலம், பூந்தோட்டம், மகாறம்பைக்குளம், நெடுங்குளம், பேயாடிக் கூழாங்குளம், விளக்குவைத்தகுளம் ஆகியவை உட்பட பல இடங்களில் விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

பேயாடிக் கூழாங்குளம் பிரதேச சபைக் கட்டடமும் இத்தாக்குதலில் சேதமுற்றது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

29/11/1990

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டைக்கோவா விதைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பிள்ளையார். 7 கைலாசபிள்ளையார் பின் வீதி நல்லூர் (14966)

### A/L இரசாயனம்

108, பிறவுண் வீதி. A/L 92 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 1 - 12 - 90 சனி 6. 30 a. m பிரிவு ii ஆரம்பம் 4- 12- 90 செவ்வாய் 4. 45 p m முதல் வகுப்பில் நேர அட்டவணை தரப்படும் A/L 91 பௌதிக இரசாயனம் ஆரம்பம்: 1- 12- 90 சனி 2. 45 p. m (14967)

### அறை வாடகைக்கு உண்டு

பெண்பிள்ளைகள் தங்குவதற்கு ஏற்ற அறை வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவிகளிற்கு உகந்தது. 60, அரசடி வீதி யாழ்ப்பாணம் (14965)

### பெண் ரைப்பிஸ்ட் தேவை

யாழ் மின்சார நிலைய வீதியில் இயங்கும் கிளினிக் ஸ்தாபனத்திற்கு ஆங்கில ரைப்பிஸ்ட், தமிழ் ரைப்பிஸ்ட்கள் தேவை அனுபவமுள்ளவர்கள் மட்டும் தங்கள் விண்ணப்பத்தை 37 சிவகுருநாதர் வீதி பிரவுண் றோட் (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும்-இந்து மகளிர் கல்லூரிச் சந்திக்கும் இடையில்) நேரடியாக டிசம்பர் 12 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். (ஓ/5465)

### தவறிவிட்டது

11 11 90 அன்று பலாலி வீதி ஆஸ்பத்திரி வீதியூடாக பஸ் நிலையம் செல்லும் வழியில் 1½ பவுண் சை யுள்ள சங்கிலி தொலைந்து விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து இ. க. இராசேஸ்வரன். 66/12 5ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (14969)

### "சாயி ரைப்பிங் சென்ரர்"

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் 1 - 12 - 90 இல் ஆரம்பம். மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- சயி ரைப்பிங் சென்ரர், நுணாவில் சந்தி சாவகச்சேரி [14839]

### FUDO

Typewriters - களுக்கு இயந்திரங்கள் வாங்கவும் வாடகைக்கு திறந்த முறையில் திருத்தவும் FUDO. 89/17, மின்சார நிலைய வீதி, 8 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இணை: பிரதான வீதி, மானிப்பாய் (C/5398

### சேவை

காலை 7 மணி முதல் 5 மணி வரை பேட்டோ ஸ்ரட் (A4 ஒரு பக்கம் ரூபா 5/- மட்டுமே) றோணியோ வேலைகள் அனைத்தும் உடனுக்குடன் செய்து கொள்ள சண்முகம் றேட்ஸ் 65 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [14738]

## மட்டுவிலில் சீ-பிளேன் சூடு

சாவகச்சேரி நவ 29

மட்டுவில் பகுதியில் சீ-பிளேன் வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது.

கடந்த 27ஆம் திகதி பகலொரு மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

சீ பிளேன் வேட்டுக்களைத் தீர்த்த போது பதுங்கு குழியில் இருந்த மக்கள் பதுங்கு குழிகளுக்குள் ஓடினர்.

பெரும்பாலான பதுங்கு குழிகளில் மழை நீர் நிரம்பி இருந்ததால் பலர் செய்வது அறியாது அங்கலாய்த்தனர். (இ - 31)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
வீரகத்தி சிவராஜன்
(சைதடி சபாத் சந்தோர் ஊழியர்)

தோற்றம்:
01 - 11 - 1962

மறைவு:
10 - 12 1989

அன்புக்குரியவனே!
விறு கொண் -
வேங்கை நீ
நீராகி ஓராண்டு
எம் நெஞ்சமெல்லாம்
இன்னும்
நீறு பூத்த நெருப்பாக...
'சுமைதாங்கிகள் என்றும் நிலைசாய்வதில்லை
சுமைகண்டு எந்நாளும் தலை சாய்ந்ததில்லை'
ஆத்மா சாந்தி பெற வேண்டும்

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

[14955]

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 92

## கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல்: | வரத்ராஜன் |
| அளவையியல்:- | S S மனோகரன் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| வர்த்தகம்: | பிரபல விரிவுரையாளர் |
| இந்துநாகரீகம்: | ஜோதீஸ்வரன் |
| தமிழ்:- | மீரா |
| புவியியல்: - | இக்னேசியஸ் |

ஆரம்பம்:- 1 - 12 - 90
சனி 8 00 A.M.

A/L 90, 91 வகுப்புகள் நடைபெறுகின்றன.

(14968)

## அஸாமில் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, நவ 29

அஸாம் மாநில அரசு கலைக்கப்பட்டு, ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இம் மாநில சட்டசபையின் ஆயுட் காலம் எதிர்வரும் டிசம்பருடன் முடிவடைய உள்ளது.

சட்டசபைத் தேர்தலை நடத்தும்படி மாநில முதலமைச்சர் பிரபுல்லாமஹந்தி அண்மையில் பிரதமர் சந்திர சேகரைச் சந்தித்து கோரியிருந்தது தெரிந்ததே.

இதேவேளை -

அஸாம் மாநிலம் முழுவதும் கிளர்ச்சி பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டு பாதுகாப்புப் படையினரின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. (இ-எ)

## எரிபொருள் விநியோக கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு பின்வரும் அளவு எரிபொருள் கொள்கலனில் விநியோகிப்பதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1 சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்.
2. SAE 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்.
3 மண்ணெண்ணெய் வாராந்தம் 200 லீற்றர் அல்லது மொத்தம் 2000 லீற்றர்

வாராந்தக் கூறுவிலைகள் 31 - 01 - 1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது ஆனால் கூறுதாரர்கள் விரும்பினால் எந்தக் கால எல்லை வரை இந்த கூறுவிலைகள் ஏற்புடையன எனக் குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்கவேண்டும்.

கூறுவிலைகள் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000/- பல்கலைக்கழக நிதிய ளரிடம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 05 - 12 - 1990 காலை 10 00மணிக்கு முன் பல்கலைக்கழக பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ் பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(இ-5461)

# பிரிட்டனின் புதிய பிரதமராக ஜோன் மேஜர் தெரிவானார்

லண்டன், நவ. 29

பிரிட்டனின் ஆளும் கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் திரு மேஜர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டனில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் தெரிவில் திரு. ஜோன்மேஜருக்கு ஆதரவாக 185 எம்பிக்கள் வாக்களித்தனர்.

அறுதிப்பெரும்பான்மை பெற இரண்டு வாக்குகளே அவருக்குக் குறைவாக இருந்தன.

இரண்டாம் கட்டத் தேர்தலில் 131 எம்பிக்களின் வாக்குகளைப் பெற்ற திரு ஹெஸல்டைன், மூன்றாவது கட்ட தேர்தல் நடப்பின் தனது வாக்கும் தனது ஆதரவு எம்பிக்களின் வாக்குகளும் திரு. மேஜருக்கு கிடைக்கும் என்று அறிவித்தார்.

56 எம்பிக்களின் ஆதரவைப் பெற்ற திரு டக்ளஸ் ஹேர்டும் தனது ஆதரவும் திரு. மேஜருக்கே என்று சொன்னார்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட தேர்தல் ரத்துச் செய்யப்பட்டது.

பின்னர் திரு மேஜர் ஆளுங்கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் தெரிவானார் என்று அறிவிக்கப்பட்டது (இ - எ)

# மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

30 - 11 - 1990 9 - 12 a.m.

## UNIKCO COMPUTER CENTRE

NO. 37 (351), Clock Tower Road,
JAFFNA.

(14971)

## A/L 92 புதிய வகுப்புக்கள்

(விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்: 02 - 12 - 1990
(காலை 9 மணிக்கு)

A/L 90, 91 பிரிவுகளும் மீண்டும் ஆரம்பமாகின்றன
(மேலும் வழமையான ஆசிரியர் குழுவினால்)

## NEW MASTER INSTITUTE

B M.C. Lane, Jaffna.

(இ-5466)

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1991

ஊர்காவற்றுறை பிரதேசசபை,
ஊர்காவற்றுறை.

1991 ஆம் ஆண்டிற்கான கீழ்க் காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பேரில் எதிர்வரும் 14 - 12 - 90 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் அவற்றிற்கான பதிவுக் கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை தபாலில் அனுப்புவோர் பதிவுக் கட்டணத்தை காசோலையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ "விசேட ஆணையாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை" என்ற பெயரில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

| பொருட்கள், சேவைகள் | பதிவுக்கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள் / அச்சிட்ட படிவங்கள் வழங்கல் | — 100 00 |
| 2 சுகாதார சேவைக்கான பொருட்கள் வழங்கல் | — 25 00 |
| 3 மின்சார பொருட்கள் வழங்கல் | — 100 00 |
| 4 வாகன தகடு தயாரித்து வழங்கல் | — 25 00 |
| 5 சீருடை துணிகள், சப்பாத்து வழங்கல் | — 50 00 |
| 6 மின் தூண்கள் வழங்கல் | — 100.00 |
| 7 சித்த ஆயுர்வேத மருந்துகள் வழங்கல் (அங்கீகாரம் உடையவர்கள் மட்டும்) | — 50.00 |
| 8 வீடுகளுக்கு உள்ளக மின் இணைப்பு செய்தல் | — 50 00 |
| 9. புத்தகங்கள் கட்டுதல் | — 25 00 |
| 10 தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் விநியோகம் | — 50 00 |
| 11 நீர் விநியோக உபகரணங்கள் வழங்கல் | — 100 00 |
| 12 வாகன மூலம் பொருட்களை ஏற்றியிறக்கல் | — 50.00 |

சி. இரகுலேந்திரன்,
விசேட ஆணையாளர்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை,
ஊர்காவற்றுறை,
27 - 11 - 90

[இ/5464]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29/11/1990

## சோடிக் குதிரைகள்

வடக்கு - கிழக்கு தற்காலிக இணைப்பை ரத்துச் செய்துவிட்டு கிழக்குமாகாணத்துக்கு என்று தனியான மாகாண சபை நிறுவப்பட வேண்டும். இவ்வாறு கொழும்பில் நடந்த முஸ்லிம் அமைப்புகளின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப மாநாட்டில கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள்.

கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், சிங்களவருடன் சேர்ந்து, அவர்களுக்குப் "பந்தம் பிடித்து" சில சலுகைகளைப் பெறுவதுடன் திருப்திப்படுபவர்கள். குறிப்பாக முஸ்லிம் மக்களின் நலன்களை ஒதுக்கி வைத்துவிட்டு, தங்களினதும், தங்களைச் சேர்ந்தவர்களினதும் தனிப்பட்ட வாழ்வை வளப்படுத்திக் கொள்பவர்கள். அதனால் தேசிய அரசியல் நீரோட்டம் என்ற மூலாம்பூசி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டிலும் சேர்ந்து, எது பதவிக்கு வந்தாலும் அதில் அமைச்சர் பதவிகளைப் கௌவிக் கொள்பவர்கள்.

சந்ததி சந்ததியாகச் சிங்களவருடன் வாழப்போகிறோம். அவர்களிடம் உரிமை என்று கேட்டு முரண்டு பிடிப்பதைவிட, சேர்ந்து போய், அவர்களைத் "தாஜா பண்ணி" சில சலுகைகளை மட்டும் பெறுவோம் சிங்களவர்கள் தருவதைக் கையில் வாங்கி முகத்தில் ஒற்றிக் கொள்வோம் என்ற அடிமைப் புத்தி உள்ளவர்கள்.

இவர்களைப் போலவே கிழக்கில் உள்ள சில செல்வாக்கும், பண பலமும் உள்ள முஸ்லிம் தலைவர்களும், ஐ. தே கட்சிக்கும், ஸ்ரீ. ல சு. கட்சிக்கும் மாறி மாறித் தாவி, தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். கிழக்கு முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்கள அரசுகள் செயற்பட்டு அவர்களின் நிலங்களைக் கபளீகரம் செய்த வேளைகளில் கூட, அதனைத் தடுக்கத் திராணி அற்றவர்களாக, கைகட்டி வாய்பொத்தி நின்றவர்கள்.

எனவே சிங்களத் தேசியக் கட்சிகளின் பக்கம் சார்ந்து நிற்கும் அரசியல் வாதிகள் கிழக்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்திப் பேசத் தகுதியற்றவர்கள். வடக்கும் – கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமோ இல்லையா என்பதை முடிவுசெய்வதற்கு அருகதை இல்லாதவர்கள்.

தாம் சார்ந்திருக்கும் சிங்களக் கட்சிகள் ஊடாக தங்கள் கருத்துக்களைத் திணித்துச் செயலாக்க அவர்கள் முயற்சிப்பர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அது குறித்துத் தமிழர்கள் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை; கணக்கில் எடுக்க வேண்டியதில்லை.

சுயாட்சி, தன்னாட்சி, தனியரசு ஒன்றே தங்களுக்கு அரசியல் விடிவைத் தரும் என்று முடிவு செய்துவிட்ட தமிழர்களுக்கு, சிங்களவர்களின் அரசியல் சகதியில் சிக்குண்டு அடிமையாகிவிட்ட கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம் தலைவர்களின் கருத்துக்கள் ஒரு பொருட்டாக நியாயமில்லை. சிங்களவர் எப்படியோ அவர்களை அண்டிவாழும் முஸ்லிம்தலைவர்களும் அப்படியே என்ற நிலைதான்! இருசாராரும் ஒரு வண்டியில் பூட்டிய சோடிக் குதிரைகளே!!

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ 29

யாழ் மாவட்ட உணவு விநியோகம், நிவாரணவேலைகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஒன்று நாளை 30 ஆம் திகதி செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதேசசபைகளின் விசேஷ ஆணையாளர்களும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ - 3)

## பாதுகாப்பு வலயத்துக்கு ஜெனரேட்டர்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். போதனா ஆஸ்பத்திரியைத் துல்லியமாக அடையாளம் காட்டும் வகையில் விசேஷ இணைப்புக்கள் மூலம் மின்விளக்குகளை வழங்க புதிய ஜெனரேட்டர் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த மின் இணைப்புக்கு தேவையான மின்சார உபகரணங்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு மின்சாரசபையால் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-5)

# சேதம் அடைந்த மருத்துவமனைகள் இன்னும் மூடப்பட்ட நிலையில்

### மட்டக்களப்பில் சுகாதார சேவை பாதிப்பு

மட்டக்களப்பு, நவ 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த மருத்துவ மனைகள் இன்னும் திறக்கப்படாததால் அந்த மாவட்டத்தின் சுகாதாரவசதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பெரிய புல்லுமலை, உன்னிச்சை, மண்டூர் திமிலதீவு மகிழவெட்டவான் பக்கியெல ஆகிய மருத்துவ மனைகளே சேதமடைந்தவை ஆகும்.

இவற்றை மீளத் திறப்பதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - 94)

## பதவி ஏற்பு

கொழும்புத்துறை. நவ. 29

யாழ்ப்பாண மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புத் திட்ட ஆணையாளராக அரியாலையைச் சேர்ந்த திரு செல்லையா பத்மநாதன் கடந்த 19 ஆம் திகதி திங்கள் முதல் பதவி ஏற்றுள்ளார் இவர் வவுனியா அரசாங்க அதிபராக முன்பு கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது (இ-30)

## மாவீரர் தினச் செய்திகள்

### காரை நகரில்

காரைநகர், நவ 29

வீரமரணமடைந்த போராளிகளின் நினைவாக மண்டபத் திறப்பு விழாவும், 25 போராளிகளின் திரு உருவப் படத்திரை நீக்கமும் மாவீரர் தினம் தொடர்பாக காரைநகரில் இடம்பெற்றன.

மண்டபத்தை காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர் திரு. அர்ஜுனும், மாவீரர்களின் படங்களை அவர்களது பெற்றோர்களும் திறந்து வைத்தனர்.

காரைநகர் வலந்தலையில் உள்ள தியாகராஜ ம. மவிக்கு முன்பாக இவை திறந்து வைக்கப்பட்டன. (இ-6)

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

ஒட்டுசுட்டான், நவ. 29

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லைநகர் மாங்குளம் நகர் ஆகிய இரு பகுதிகளையும் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மாவீரர் நாளான 21 ஆம் திகதி புலிக்கொடி ஏற்றும் வைபவங்கள் இடம் பெற்றன.

படசாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகங்கள் ஆகியவற்றின் முன்றல்களில் கொடி ஏற்றும் வைபவங்கள் இடம்பெற்றன.

கொடி ஏற்றுவதற்கு முன் மறைந்த போராளிகளை நினைவு கூறி 2 நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது (இ-113)

### சிரமதானம்

கொழும்புத்துறை நவ 29

மாவீரர் தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினரும், சிற்றாரையினரும் இணைந்து கொழும்புத்துறை வீதி, கடற்கரைப் பகுதி ஓரங்களை சிரமதானம் மூலம் மண் போட்டு நிரப்பினர். (இ-30)

### இடம் பெயர்ந்த ஆசிரியர்

## அருகிலுள்ள அலுவலகத்தில் சமுகம் அளிக்க வசதி

கொழும்பு, நவ. 29

வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் தாம் தங்கியிருக்கும் பகுதிகளில் அருகில் உள்ள பிரதேச கல்வி அலுவலகத்தில் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சுயவிருப்பத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற விரும்பும் ஆசிரியர்கள், தங்கள் விண்ணப்பங்களை அருகில் உள்ள கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்து ரசீது பெற்றுக்கொள்ளும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர் (இ - எ)

## மின்கோபுர நிலைமையை நேரில் அறிய மாங்குளத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 29

மாங்குளம் பகுதியில் சேதமடைந்துள்ள மின்கோபுரம் எந்த நிலையில் இருக்கிறது. அதனைத் திருத்த முடியுமா என்பனவற்றை நேரில் கண்டறிவதற்காக மின்சார சபையைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் இவ்வார இறுதியில் அங்கு செல்லவுள்ளார்

மாங்குளம் இராணுவ முகாமிற்குச் சமீபமாக யாழ் குடாநாட்டிற்கான பிரதான மின் இணைப்புக் கோபுரத்தில் சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நீர்மின் விநியோகம் கடந்த பல மாதங்களாக தடைப்பட்டிருப்பது தெரிந்ததே.

அந்தப் பகுதியைச் சென்று பார்ப்பதற்குக் கூட இதுவரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை.

தற்போது இராணுவ முகாம் அங்கு இல்லாததால் இனி அப்பகுதிக்குச் சென்று நிலைமையைக் கண்டறிவதற்குத் தடை எதுவும் இருக்காது என நம்பப்படுகிறது

முதலில் அங்கு சென்று சேதங்களைப் பார்த்து வந்த பின்னரே திருத்தவேலைகளை மேற்கொள்ளக் கூடிய சாத்தியம் உண்டா என்பது தெரிய வரும் என்று மின்சாரசபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ- 5)

## டிராப்ட் கொடுத்து பொருள் வாங்க வவுனியாவில் வசதி

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாண வியாபாரிகள் பணத்துக்குப் பதிலாக வங்கி காசோலைக்கு வவுனிய வில் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது

இதுவரை யாழ்ப்பாணத்தில இருந்து செல்லும் வியாபாரிகள் பணத்தைக் கொடுத்தே பொருள்களைக் கொள்வனவு செய்து வந்தனர்

யாழ்ப்பாண வங்கிகளால் வழங்கப்படும் வங்கி காசோலைகளை (Draft) வவுனியா வியாபாரிகள் பெற்று பொருள்களை விற்பனை செய்கிறார்கள்

வவுனியாவில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஹட்டன் நஷனல் வங்கி ஆகியவை யாழ்ப்பாண வங்கிகாசோலைகளை ஏற்பதலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் வவுனியாவில் இயங்கும் வங்கிகளுக்கு அனுராபுரம் பிராந்திய அலுவலகங்களில் இருந்து பணம் அனுப்பப்படுகிறது [இ - 3]

## தமிழீழ மீட்பு நிதி வழங்கிய 100 பேருக்கு கடன் மீளளிப்பு

யாழ்ப்பாணம் நவ. 29

தமிழீழ மீட்பு நிதி வழங்கி பங்களித்தவர்களில் முதற் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேருக்கு நேற்று முன்தினம் கடன் மீளளிக்கப்பட்டது.

மூன்று நிலையங்களில் வைத்து இந்தக்கடன் மீளளிப்புச் செய்யப்பட்டது.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்ற மீளளிப்பு நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி கலந்து கொண்டார்.

மானிப்பாய், பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் கடன் மீளளிப்பு இடம்பெற்றது. (இ 6)

### கப்பல் கட்டும் துறை

# வல்வெட்டித்துறை பற்றியும் கொழும்பு மாநாட்டில் ஆராய்வு

கொழும்பு, நவ. 29

பண்டைக்காலத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் ஆற்றிய பங்கு குறித்தும் கொழும்பில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி முதல் 14-ஆம் திகதி வரை நடைபெறும் மாநாட்டில் ஆராயப் படவிருக்கிறது.

கலாசார தகவல் துறை அமைச்சர் திரு. டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார இத்தகவலை வெளியிட்டார்

இந்த மாநாடு சம்பந்தமாக கடந்த வாரம் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அந்த மாநாடு சம்பந்தமாக மேலும் தெரிவித்ததாவது;

"கடல்துறை பட்டொளிப் பாதை" மாநாடு என அழைக்கப்படும், இதில் வெளிநாட்டு, உள்நாட்டுக் கல்விமான்கள் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில் வர்த்தகத் தொடர்புகளில் வடக்கு தெற்கு மாகாணங்கள்வகித்த பங்கும், கப்பல் கட்டும் தொழிலின் வடக்கை குறிப்பாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் ஆற்றிய பங்கும் இந்த மாநாட்டில் ஆராயப் படவிருக்கின்றன.

அத்துடன் பண்டைக் காலக் கப்பல்கள், தோணிகள் பொருள்கள் மற்றும் தகவல்கள் கொண்ட கண்காட்சியும் இடம்பெறவுள்ளது இப்படி அவர் தெரிவித்தார்

பண்டைக்காலத்தில் வர்த்தகத் தொடர்புகளில் வடக்கு மாகாணம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

கப்பல் கட்டும் தொழிலில் இலங்கையர் – குறிப்பாக வடக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்று களனி பல்கலைக்கழக புதைபொருள் சம்பந்தமான பேராசிரியர் திரு. சேனக பண்டார நாயக்கா இந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பண்டைக்காலத்தில் நாற்றில் பிடிக்கப்பட்ட யானைகள் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டு யாழ்ப்பாணத்தில் ஏலத்தில் விற்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (இ-3-5)

## கூட்டுறவு அதிகாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் ப. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர். (இ 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கிராமப் பகுதிகளுக்கு உணவுபொருள் விநியோகம் பாதிப்பு

வவுனியா, நவ. 29

வவுனியா நகரத்திலிருந்து கிராமப் புறங்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் சென்று விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து வவுனியா நகரையும், அதனை அண்டிய பகுதிகளையும் விட்டு இடம் பெயர்ந்து சென்று கிராமப் புறங்களில் தங்கியுள்ள ஏராளமான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்துக் கஷ்டம், சீரற்ற காலநிலை, வாகனக் கூலி பல மடங்கு அதிகரித்துள்ளமை ஆகிய காரணங்களினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் உணவுப்பொருள்கள் இருந்தும் அவற்றை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பநோ: கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். [அ 6]

## கோப்பாய் கலாசாலை மாணவருக்கு

யாழ்ப்பாணம், நவ. 29

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இரண்டாம் வருட மாணவரை கலாசாலையில் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இறுதிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டியுள்ளதால், உடனடியாக கலாசாலைக்கு சமுகம் தரும்படி அதிபர் அறிவித்துள்ளார். [ஒ-3]

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கங்கள் உட்பட ஏனைய கூட்டுறவு சங்க பொது முகாமையாளர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற இருக்கிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நிர்வாகச் செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும். [ஒ-3]

## மீண்டும் ருஷ்டி

லண்டன், நவ 29

பிரச்சினைக்குரிய பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மக் ருஷ்டி கடந்த இரண்டு ஆண்டு கால தலைமறைவு வாழ்க்கையின் பின்னர் முதல் தடவையாக கடந்த திங்கள் பகிரங்கமாகத் தோன்றினார்.

இஸ்லாம் மதத்தை நிந்தனை செய்வதாகக் கூறப்படும் "சாத்தானின் கவிதைகள்" நூலை எழுதியதற்காக ருஷ்டி மீது மறைந்த ஈரானிய ஆத்மீகத் தலைவர் ஆயத்துலலா கொமேனி மரணதண்டனை விதித்தது தெரிந்ததே. (இ-எ)

## ஆஸ்பத்திரி கட்டடம் திறந்து வைப்பு

தென்மராட்சி, நவ. 29

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பார்வையாளர் தங்கு மண்டபக் கட்டடம் மாவீரர் தினமான நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடத்தை, வீரமரணமடைந்த போராளி ரேகாவின் தாயார் திறந்துவைத்தார்.

அன்று நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் சா. கை வ. சங்கத்தினரால் மதிய உணவும் வழங்கப்பட்டது. [ஓ-117]

## கடைசி நேரம் வந்த அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

அரச ஊழியர்களின் சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறும் திட்டம் குறித்த சுற்று நிருபம் நேற்றைய தினமே யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தது

அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக இளைப்பாறச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இளைப்பாறும் சாதாரண அரச ஊழியர் ஒரு மாத கால முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். இதன்படி நாளைக்குள் இளைப்பாறும் கடிதம் கொடுக்கப்பட வேண்டும்.

செயலகத்தில் 15 பேர் இளைப்பாற விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. [அ-3]

## நிவாரணமாக சமையல் எண்ணெய்

யாழ்ப்பாணம், நவ. 29

பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கம் சமையல் எண்ணெயை நிவாரணமாக வழங்க இருக்கிறது.

கர்ப்பிணித்தாய் மார்களும், பாலூட்டும் தாய்மார்களும். அகதி முகாம்களில் தங்கி உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தாய்மார்களும் தங்கள் பகுதியில் உள்ள குடும்ப நல சேவையாளர்களின் சிபார்சுடன் இந்த நிவாரணத்தைப் பெறலாம் என தெரிவிக்கப்பட்டது. (ஒ 3)

### விமானக் குண்டு ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வயது], தங்கராசா சிவதரன் [18 வயது] - 14 ஆம்கட்டை. ஓட்டுசுட்டான், சுப்பிரமணியம் கவிதன் [23 வயது] - சிவன் கோவிலடி, ஓட்டுசுட்டான், வேலுப்பிள்ளை சிவரஞ்சனி [13 வயது] - முள்ளியவளை. மகேந்திரன் [21 வயது]-சிவன்கோவிலடி, ஒட்டுசுட்டான்.

இந்தத் தாக்குதலில் காயமுற்றோர் பெயர் விவரங்களும் ஏற்பட்ட உடைமைச் சேதங்கள் பற்றிய தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை. [உ]

### 47 வயதான,..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சர் அனுபவத்தை மட்டுமே பெற்றுள்ள திரு. மேஜர், பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டபோது நிதி அமைச்சர் பதவியை வகித்துவந்தார்

இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பதவிக்கு வந்த முதலாவது வயது குறைந்த பிரதமர் இவர் ஆவார்.

தென்லண்டன் பாடசாலை ஒன்றில் கல்வியை முடித்துக்கொண்ட திரு. மேஜர், பல்கலைக் கழகம் சென்று உயர் கல்வி பெறவில்லை.

சாதாரண லங்கி ஊழியராக சிலகாலம் பணிபுரிந்த இவர்பின்னர் அரசியலில் இறங்கினார். (அ-எ)

(மற்றும் செய்தி 2ஆம் பக்கத்தில்)

# கொடிகாமம் பகுதியிலும் இரவு நேரத்தில் தாக்குதல்

29/11/1990

தென்மராட்சி, நவ. 29

மாவீரர் நாளான நேற்று முன்தினம் (செவ்வாய்) இரவு 11 30 மணிக்கு கொடிகாமம் சந்திப்பகுதியில் ஹெலிகொப்டர் தாக்குதலை நடத்தியது.

இத் தாக்குதலில் மூவர் காயமடைந்தனர். கொடிகாமம் நவீனசந்தையில் இரு கடைகள் சிறு சேதங்களுக்குள்ளாகின;

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சி அசோக்குமார் (வயது 48) சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (ஓ-117)

# 2 லட்சத்து 15 ஆயிரம் பேர் மட்டக்களப்பில் வீடு இழப்பு

மட்டக்களப்பு, நவ. 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 47 ஆயிரத்து 579 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2 லட்சத்து 15 ஆயிரத்து 735 பேர் வீடு, வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் 13 ஆயிரத்து 34 குடும்பங்களைச் சேர்ந்த 57 ஆயிரத்து 430 பேர் அகதி முகாம்களில் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

34 ஆயிரத்து 545 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து58 ஆயிரத்து 305 பேர் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு அரச அதிபர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதே சமயம்—

வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரத்து 500 பேர் வாகரை உதவி அரச அதிபர் பிரிவில் தங்கியுள்ளதாகவும்கூறப்படுகிறது. (உ-6)

## இரணைக் கன்றுகள்

யாழ்ப்பாணம், நவ. 30

ஒரு தேங்காய் நாற்றிலிருந்து இரண்டு தென்னங்கன்றுகள் முளைத்துள்ளன, மாவீரர் தினத்தையொட்டி நடைபெற்ற மரம் நடும் இயக்கத்தில் அந்த அபூர்வத் தென்னங்கன்றுகளும் நடப்பட்டன.

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த திரு: கதிர்காமர் கந்தையா சிறிய அளவில் வீட்டுக்கு அடக்கமாக ஒரு நாற்று மேடை அமைத்தார்.

தனது நாற்று மேடையில் வளர்ந்த செவ்விளநீர்க்கன்றுகளை மரம் நடும் இயக்கத்தின் போது நடுவதற்குக் கொடுத்தார். ஒரே தேங்காய் நாற்றிலிருந்து முளைத்த இரண்டு கன்றுகளும் அவற்றில் அடங்கும்.

அந்த இரணைக்கன்றுகளை உதயன் அலுவலகத்துக்கு எடுத்துவந்து காட்டிய அவர் அவற்றைத் தமது வளவிலேயே நடப்போவதாகத் தெரிவித்தார். (அ)

### மைனா பிடிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கருதி மருத்துவ உதவியை நாடாமல் - கவனிக்காமல் - இருந்ததால் இந்தப் பரிதாபச் சாவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-152]

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## கிறேஸ் ஜெயமணி நாகலிங்கம்

மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கிறேஸ் ஜெயமணி நாகலிங்கம் புதன்கிழமை 28-11-90 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற J. P நாகலிங்கத்தினது அன்பு மனைவியும். டெய்சி, டான், டல்சி ஆகியோரது அன்புத் தாயாரும், தொமஸ் தர்மராஜா, தேவமலர், பென் லோறன்ஸ் ஆகியோரது மாமியாரும், ஷெறீன், டொறீன், காலஞ்சென்ற ஷேளி, மொறீன், மேளி, டச்றீன், டிலானி ஆகியோரது அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (29-11 90) வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவர்களது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் C. S I. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பிள்ளைகள்

(14973)

## முத்தையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர், உசன் - மிருசுவில்)

திரு. மு சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்) 28 - 11 - 90 அன்று காலமானார். அன்னார் திருமதி சீதேவனின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் திருமதி மீரா தேவரஞ்சன் (இலங்கை வர்த்தக வங்கி யாழ்ப்பாணம்), சிறீதரன், திருமதி மாலினி சிவபாலன் (Sychels) பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சற்குணசிங்கம் தேவரஞ்சன் (இலங்கை வர்த்தக வங்கி கொழும்பு) N. சிவபாலன் (Sychels) திருமதி சோமகலா சிறீதரன் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29 - 11 - 90 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி மீரா தேவரஞ்சன் (மகள்)

சிறீதரன் (மகன்)

உசன்
மிருசுவில்

(14669)

# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன்

கரும்பனையைச் சேர்ந்தவரும் லங்கா சீமெந்து லிமிடெட் இயக்கும் பகுதியில் தொழில் புரிபவருமாகிய கிருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன் (ஆமி) 28.11 90 அன்று நீதிமன்ற வீதி மல்லாகத்தில் அகால மரணமானார்.

இவரது ஈமக்கிரியைகள் இன்று (29 11 90) காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். நண்பர்கள், உறவினர்கள் இத்தகவலை ஏற்குமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

மா. மரியதாஸ் (சகலன்)

நீதிமன்ற வீதி
மல்லாகம்.

(14974)

திருமதி

## லீலாவதி பரராஜசேகரம்

திருமதி லீலாவதி - பரராஜசேகரம் அவர்கள் 24-11-90 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா பரராஜசேகரம் [Fomerly of Auditor General Office Colombo] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பண்டாரம்பிள்ளை கணபதிப்பிள்ளை கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி கலாவல்லி இலங்கரட்ணம், சேகர் [பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை] செல்வி அமிர்தவல்லி [ஆசிரியை அளிசாவெல] ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லப்பா இலங்கரட்ணம் [முகாமையாளர் இலங்கை வங்கி மாளிகாவத்தை], திருமதி அருட்செல்வி சேகர் [விற்பனைத் திணைக்களம் யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமியும், காயத்திரி, அபிராமி, ஜனனி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

வி. நாகரத்தினம்

கொக்குவில் றோட்,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்

(14975)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org